**பதுளை மா நகர சபை**

**பதுளை மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மே 05 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 செப்டம்பர் 16 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 28 ஆந் திகதி நகர சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதுளை மா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது 15 காணிகள் மற்றும் 14 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபைக்கு நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த 03 மோட்டார் வண்டிகளின் பெறுமதியாகிய ரூபா 33,077,813 தொகையினை நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் ரூபா 53,624 தொகையினால் **அதிகரித்துக்** கணக்கீடு செய்யப்பட்டிருந்தது

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் ரூபா 272,680 தொகையினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களின் முதலீட்டு பெறுமதி ரூபா 120,428 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் 07 மாதங்கள் தொடர்பாக பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதி மன்றத் தண்டப் பணம் என்பவற்றிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காமையால் வருமானம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 1,813,212 தொகையினால் குறைவாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தமையால் மிகை அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடை வாடகை மீது விதிக்கப்பட்டிருந்த 10% மிகை விதிப்புக் கட்டணமாகிய ரூபா 381,854 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) ரூபா 142,500 தொகைக்கான 03 பதவியணிக் கடன் மீதிகள் குறைவாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) முன்னைய ஆண்டு தொடர்பாக நடைமுறை ஆண்டின் போது செய்யப்பட்ட ரூபா 615,507 தொகை பெறுமதியான செலவுகள் நடைமுறை ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 61,134,480 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டிற்கான தொடர்ந்துவரும் வருடத்தின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 389,177 தொகை பெறுமதியான செலவுகள் தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஊழியர் பிணை முதலீட்டு கணக்கின் மீதி மற்றும் ஊழியர் பிணை வைப்புக் கணக்கின் மீதி ரூபா 15,181 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ச) நூலகப் புத்தகக் கணிப்பீட்டின் மூலம் அகற்றுவதற்காக விதப்புரைக்கப்பட்டிருந்த ரூபா 307,338 தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்படவில்லை.

(ஞ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த முன்னைய ஆண்டின் திசெம்பர் மாதத்திற்கான மந்திரிமார் படி மீளளிப்புக்களின் பெறுமதியாகிய ரூபா 315,000 தொகையினை நடைமுறை ஆண்டிற்கான வருமானமென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ட) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கான மந்திரிமார் படி மீளளிப்பு பெறுமதியாகிய ரூபா 295,000 தொகை தொடர்பாக கடன்பட்டோர் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

(ண) மீளாய்வாண்டிற்கான கணக்குகள் சமர்ப்பிக்கும் போது கணக்குகளின் தகவல்களை இணக்கஞ் செய்யக் கூடிய விதமாக குறைந்த பட்சம் இரண்டு வருடங்கள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 553,850,728 தொகையான 23 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த மீதிகள் ரூபா 288,868,859 தொகையினால் இணங்கியிருக்கவில்லை.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 69,817,922 தொகையாகக் காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 129,423,985 ஆக இருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 57,539,496 தொகை பெறுமதியான 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக சொத்துக்கள் பதிவேடு, சேமிப்பு வைப்புக்கள், இருப்புக் பதிவேடு, பட்டோலைகள், மதிப்பளிக்கப்படாத காசோலைகள் மற்றும் ஊழியர்களின் கோவைகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் | |
| (i) 127(1) ஆம் பிரிவு மற்றும் 42 ஆம் பிரிவு | 2011 முதல் 2015 ஆண்டு வரையான காலப் பகுதியில் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 1075 கட்டிட விண்ணப்பங்களில் 141 இணக்கச் சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அத்துடன் அங்கீகாரம் பெற்றிருக்காத கட்டிடங்களை உடைத்துவிடுவதற்கு மா நகர சபை ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |
| (ii) 218 ஆம் பிரிவு | நகர முதல்வரினால் ஒவ்வொரு நிதி ஆண்டின் போதும் அவரது நிருவாகம் பற்றி விரிவான அறிக்கை ஒன்று அவ்வாண்டின் போது மா நகர சபை நிதியத்திற்கு சேர்ந்துள்ள பெறுவனவுகள் மற்றும் அந்த நிதியத்தில் இருந்து செய்யப்பட்டிருந்த கொடுப்பனவுகளின் தன்மைகள் மற்றும் தொகையினைக் காட்டக் கூடிய கூற்றொன்றுடன் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் தயாரிக்கப்பட்டு சபையினால் அனுமதிக்கப்பட்டு ஆறு வாரங்களுள் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், கடந்த 04 வருடங்களின் போது மற்றும் மீளாய்வாண்டு தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>----------------------------------------- | |
| | நி.பி. 395(இ) | இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரித்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையின் 11.14 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் நி.பி.102 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கடன்கள் முற்பணங்கள் வழங்கப்பட்ட பின்னர் அக் கோவைகள் பதவியணி அலுவலர் ஒருவரின் பொறுப்பில் இரும்புப் பெட்டி ஒன்றில் வைக்கப்பட வேண்டும். எனினும், மா நகர சபையில் ரூபா 304,780 பெறுமதியான 12 கடன் கோவைகள் காணாமல் போயிருந்தன. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை 2009 செப்டம்பர் 01 திகதிய DMA/2009/02 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் கணனிகள் துணைக் கருவிகள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2015 ஜூலை 10 திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பாவணையில் இருந்து அகற்றப்பட்டிருந்த 20 வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதிகள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2012 ஜூலை 30 திகதிய SEC 2012/03 ஆம் இலக்க சுற்றறிக்கை | பெறுமதி கூட்டிய வரி கணிக்கும் போது நிறுவனத்தினால் செலுத்தியிருந்த வரியினை கணக்கில் எடுத்திருக்காமையால் உள்நாட்டு இறை ஆணையாளர் நாயகத்திற்கு ரூபா 167,849 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,883,986 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 33,781,222 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி, களியாட்ட வரி, குத்தகை வருமானம் மற்றும் சேவைக் கட்டணம் என்பவற்றினை அறவீடு செய்வதில் காணப்பட்ட முன்னேற்றம் 34 சதவீதம் வரையான பலவீன நிலையில் காணப்பட்டது.

(ஆ) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 261 இன் பிரகாரம் வீதவரி செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் அசையும் ஆதனங்களைத் தடைசெய்வதன் மூலம் நிலுவை வீதவரியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 12 ஆம் இலக்க வீதவரி வட்டாரத்தில் தெரிவுப் பரிசோதனையின் போது 23 காலாண்டுகளை விட மிகையான காலம் முதல் நிலுவை வீதவரி அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 254(1) இன் பிரகாரம் நகர சபைக்கு கிடைக்க வேண்டிய வரிகள், அனைத்து வருமானங்களும் நகர ஆணையாளரினால் அறவிடப்பட வேண்டும். எனினும், 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 35,530,932 தொகையினை அறவீடு செய்வதற்காக முறையான செயற்பாடு ஒன்று எடுத்திருக்கவில்லை.

(ஈ) அரச நிறுவனங்களுடன் முறையான தொடர்பினை ஏற்படுத்தி வீதவரியினை குறிப்பிட்ட ஆண்டின் போதே அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமையால் மா நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட தொகையான அரச நிறுவனங்களிடம் அறவிடப்பட வேண்டிய வீதவரி நிலுவை காணப்பட்டது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணனி மென்பொருள் அறிக்கையின் பிரகாரம் வீதவரி நிலுவை மீதி மற்றும் பொதுப்பேரேட்டின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 1,282,904 தொகையினால் இணங்கியிருக்கவில்லை.

(ஊ) 2008 மார்ச் 01 திகதி கொள்வனவு செய்திருந்த கணனி மென்பொருளிற்காக இது வரை செலுத்தியிருந்த வருடாந்த சேவைக் கட்டணம் 7 வருடங்களுக்காக ரூபா 490,000 தொகை எனினும் அதற்காக நகர சபையினால் உற்பத்தித் திறனை பெற்றுக்கொள்வதற்காக நெறிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) நகர சபையின் அதிகார பிரதேசத்தில் செயற்படும் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்காக 2015 ஆண்டிற்காக 2014 திசெம்பர் 26 திகதிய 1895 இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வர்த்தக அனுமதிப்பத்திரம் மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் என்பன 2015 திசெம்பர் 31 திகதி வரை வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், தங்குமிடங்களில் இருந்து அவற்றின் முன்னைய ஆண்டிற்கான பெறுவனவுகள் மீது 1% இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் ஒன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது ரூபா 5,000 தொகை ஒன்றிற்காக வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஐ) 2015 ஆண்டின் சிங்கள, தமிழ் புத்தாண்டு காலத்திற்காக சேனாநாயக மைதானத்தில் வியாபாரம் செய்வதற்காக காணி ஒதுக்கும் போது ஒரு நாளைக்கு ரூபா 200 இற்கான "தூய்மை செய்யும் கட்டணம்" ஒன்று மாத்திரம் அறவீடு செய்யப்படுவதன் மூலம்

முன்னைய ஆண்டுடன் ஒத்த ரூபா 490,446 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்திருந்தது.

(ஒ) சேனாநாயக மைதானத்தில் நாளாந்தம் சுமார் 50 வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதிலும் அவர்களிடம் வாடகை அறவீடு செய்வதற்கு அல்லது அனுமதி இல்லாத வியாபாரிகளை அகற்றுவதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஓ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பதுளை வாடிவீடு 2014 மார்ச் 12 திகதி மீண்டும் மாநகர சபைக்கு பெற்றிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 திகதி வரை வருமானத்தை உழைப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஔ) 2012 ஜுன் முதல் 2014 மார்ச் வரை வாடிவீட்டு முகாமைத்தவக் கட்டணமாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,975,280 தொகையினை 2015 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

--------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,557,767 தொகையொன்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,381,452 தொகையொன்றும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் XVI ஆம் அத்தியாயம் 133 பிரிவின் பிரகாரம் அரச நிறுவனங்களில் வட்டி வருமானங்கள் தடுத்து வைத்தல் வரியில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மா நகர சபைக்கு சொந்தமான 04 நிலையான வைப்புக் கணக்குகள் தொடர்பாக வட்டி செலுத்தும் போது வங்கியினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரூபா 80,308 தொகை வட்டியினை திருப்பி சபைக்கு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,883,710 தொகை பெறுமதியான மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நீண்ட காலம் முதல் காசோலைகள் தேறப்படாமல் காணாமல் போதல் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 189 மற்றும் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

வருமானங்கள் ஏதும் அறவிடப்படாமல் 2014 மார்ச் முதல் 2015 ஜூலை வரை பதுளை வாடிவீட்டின் மின்சாரக் கட்டணமாக ரூபா 82,229 தொகையினை சபை செலவிட்டுள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---

2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.2 இன் பிரகாரம் சபையின் கொள்வனவுகள் மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பாக வருடாந்தம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் போது அவ்வாறு செய்திருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

---

2015 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

---

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு

(உ) வாகனக் கட்டுப்பாடு

(ஊ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு